பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

**செ.வெ.எண். 86** **நாள்: 22.06.2018**

**கல்விச் சுற்றுலாவாக அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ள சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களை இன்று சந்தித்து வாழ்த்து பெற்றனர்.**

கல்விச் சுற்றுலாவாக அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு அழைத்துச் செல்லப்படவுள்ள சென்னைப் பள்ளி மாணவ/மாணவியர்கள் மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி.வேலுமணி அவர்களை இன்று (22.06.2018) சென்னையில் சந்தித்து வாழ்த்து பெற்றனர்.

பெருநகர சென்னை மாநகராட்சி, கல்வித்துறையின் சார்பாக பள்ளி மாணவ, மாணவியர்களின் தனித்திறனை வெளிக்கொணர்வதற்காக பல்வேறு போட்டிகள் நடத்தப்பட்டு, அவர்களை ஊக்கப்படுத்துவதற்காக பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்பட்டு வருகிறது. பெருநகர சென்னை மாநகராட்சியும், சென்னை ரோட்டரி கிளப் கிழக்கும் இணைந்து விங்ஸ் டு பிளை என்ற திட்டத்தின் மூலம் 6 முதல் 12 ஆம் வகுப்பு வரை பயிலும் சென்னைப்பள்ளி மாணவ/மாணவியர்களுக்கு மூன்று சுற்றுகளாக அறிவியல் சார்ந்த போட்டிகளை நடத்தியது. இறுதிச்சுற்றில் வெற்றி பெற்ற 8 மாணவ / மாணவியர்கள் (5 மாணவர்கள், 3 மாணவியர்கள்) அமெரிக்காவில் உள்ள நாசா விண்வெளி ஆராய்ச்சி மையத்திற்கு 04.07.2018 முதல் 14.07.2018 வரை கல்விச்சுற்றுலா அழைத்து செல்லப்பட உள்ளனர். இவர்களுக்கு உதவியாக உதவிக் கல்வி அலுவலர் திருமதி.டி.ரோகினி மற்றும் இரண்டு சென்னை ரோட்டரி கிளப் கிழக்கு உறுப்பினர்களும் உடன் செல்ல உள்ளனர்.

<u>நாசாவிற்கு சுற்றுலா செல்லும் மாணவ /மாணவியர்களின் விவரம்</u>

| வ. எண் | பள்ளியின் பெயர் | மாணவ / மாணவியர்களின் பெயர் | வகுப்பு |
|---|---|---|---|
| 1. | சென்னை மேல்நிலைப்பள்ளி,கோயம்பேடு | S.ராஜ் குமார் | 10 ஆம் வகுப்பு |
| 2. | சென்னை பெண்கள் மேல்நிலைப்பள்ளி, புல்லா அவென்யூ | S.பிரேமா | 10 ஆம் வகுப்பு |

| | | | |
|---|---|---|---|
| 3. | சென்னை ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சைதாப்பேட்டை | G.யோகேஷ் | 11 ஆம் வகுப்பு |
| 4. | சென்னை உயர்நிலைப்பள்ளி, வன்னிய தேனாம்பேட்டை | I.ஆதவன் | 8 ஆம் வகுப்பு |
| 5. | சென்னை மேல்நிலைப்பள்ளி, கோயம்பேடு | R.கோபிநாத் | 8 ஆம் வகுப்பு |
| 6. | சென்னை உயர்நிலைப்பள்ளி, அர்தூன் ரோடு | T.சுபாஷ் | 9 ஆம் வகுப்பு |
| 7. | சென்னை உயர்நிலைப்பள்ளி, கொய்யாதோப்பு | P.ரேஷ்மாகுமாரி | 8ஆம் வகுப்பு |
| 8. | சென்னை மேல்நிலைப்பள்ளி, அயனாவரம் | D.காவ்யாஞ்சலி | 7 ஆம் வகுப்பு |

கடந்த ஆண்டு 7 மாணவ/மாணவியர்கள் ஜெர்மனி நாட்டிற்கும், அதற்கு முந்தைய ஆண்டு 7 மாணவ/மாணவியர்கள் மலேசியா நாட்டிற்கும் கல்விச்சுற்றுலா அழைத்து செல்லப்பட்டனர்.

கல்விச்சுற்றுலா செல்லும் மாணவ, மாணவியர்கள் இப்பயணத்தை நல்ல முறையில் பயன்படுத்தி கொள்ளவும், இந்த அனுபவத்தின் மூலம் தங்களது திறனை வளர்த்து கொண்டு எதிர்கால வாழ்வினை சிறப்பான முறையில் ஏற்படுத்திக்கொள்ளவும் மாணவ, மாணவியர்களுக்கு வாய்ப்பு ஏற்படுத்தி தரப்பட்டுள்ளது. இதன்மூலம் மாணவ/மாணவியர்கள் தங்களது எதிர்கால வாழ்வினை வளமாக்கி கொள்ள வேண்டும் என மாண்புமிகு நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி மற்றும் சிறப்பு திட்டங்கள் செயலாக்கத்துறை அமைச்சர் திரு.எஸ்.பி. வேலுமணி அவர்கள் வாழ்த்துகளை தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அரசு முதன்மை செயலர் திரு.ஹர்மந்தர் சிங், இ.ஆ.ப., அவர்கள், பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர் தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள், துணை ஆணையாளர் (கல்வி) திருமதி மகேஸ்வரி ரவிக்குமார், இ.ஆ.ப, அவர்கள், கல்வி அலுவலர் (பொ) திரு.இ.கோவிந்தசாமி, கூடுதல் கல்வி அலுவலர், உதவிக் கல்வி அலுவலர்கள், பள்ளித் தலைமையாசிரியர்கள், மாணவ, மாணவிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு : இணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**